# டிவிஎஸ் மோட்டார் கம்பெனி லிமிடெட் TVS

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006
தொலைபேசி : 044 - 28332115, தொலைநகல் : 044 - 28332113 இணையதளம் : www.tvsmotor.com
மின்னஞ்சல் : contactus@tvsmotor.com; icsta@scl.co.in CIN : L35921TN1992PLC022845

## 28வது ஆண்டு பொதுக்கூட்டம் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பற்றிய அறிவிப்பு

கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் ஏப்ரல் மற்றும் மே 2020–ல் வெளியிட்ட சுற்றறிக்கைகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015, அதன்கீழ் உள்ள விதிகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013–ல் பொருந்தக்கூடிய விதிகளின்படி ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் ஆஜர் ஆகாமல் காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / காட்சி சார்ந்த வழிமுறைகள் ("OAVM") மூலமாக கம்பெனியின் 28–வது வருடாந்திர பொதுக்கூட்டம் புதன்கிழமை ஜூலை 29, 2020 அன்று காலை 10 மணிக்கு, பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பில் உள்ள தீர்மானங்களை நிறைவேற்ற நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளம் (www.tvsmotor.com) பிஎஸ்இ லிமிடெட் (www.bseindia.com) மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் (www.nseindia.com) இணையதளத்திலும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதிக்காக அளிக்கப்பட்ட முகவர்) இணையதளத்திலும் (www.evoting.nsdl.com) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்திடமோ / டெபாசிட்டரிகளிடமோ தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை மின்னஞ்சல் மூலம் ஜூலை 6, 2020 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

கம்பெனி / டெபாசிட்டரியிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களின் நகல்களை icsta@scl.co.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பின் நகல்கள், வருடாந்திர அறிக்கை மற்றும் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைவதற்கான விவரங்களை மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ளலாம். உங்களது பெயர், ஃபோலியோ எண், முழு முகவரி, பதிவு செய்ய வேண்டிய மின்னஞ்சல் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்ட கோரிக்கை கடிதம், பங்கு சான்றுகளின் நகல் (முன் மற்றும் பின் பக்கம்), சுய சான்றளிக்கப்பட்டு ஸ்கேன் செய்யப்பட்ட பான் மற்றும் கம்பெனியிடம் பதிவு செய்யப்பட்ட முகவரிக்காக ஓட்டுனர் உரிமை / பாஸ்போர்ட் / வங்கி அறிக்கை / ஆதார் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை சுயசான்றளிக்கப்பட்டு, ஸ்கேன் செய்யப்பட்ட நகலை இணைக்க வேண்டும்.

வரையறுக்கப்பட்ட நாளான ஜூலை 22, 2020 அன்று காகித வடிவில் / டீமேட் முறையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் 28–வது ஆண்டு பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பில் உள்ள சாதாரண மற்றும் சிறப்பு வர்த்தகங்கள் குறித்தான தீர்மானங்களுக்கு மின்னணு முறையில் அல்லது NSDL (தொலைமின் மின்னணு வாக்களிப்பு) மூலம் தங்கள் வாக்கை பதிவு செய்யலாம்.

அனைத்து அங்கத்தினர்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால் :

1. ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய சாதாரண மற்றும் சிறப்புத் வர்த்தகங்கள் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது மின்னணு வாக்குப்பதிவு மூலம் செயலாக்கப்படும்.
2. மின்னணு மூலம் வாக்குப்பதிவு ஆரம்பிக்கும் நாள் மற்றும் நேரம்: ஞாயிற்றுக்கிழமை, ஜூலை 26, 2020 காலை 9 மணி.
3. மின்னணு மூலம் வாக்குப்பதிவு முடிவடையும் நாள் மற்றும் நேரம்: செவ்வாய்க்கிழமை, ஜூலை 28, 2020 மாலை 5 மணி.
4. மின்னணு மூலம் வாக்குப்பதிவு செவ்வாய்க்கிழமை, ஜூலை 28, 2020 மாலை 5 மணிக்கு மேல் அனுமதிக்கப்பட மாட்டாது.
5. மேலே குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குப்பின் தொலைவில் இருந்து வாக்களிக்க இயலாது. அங்கத்தினர்கள் தீர்மானத்தின் மீது ஒருமுறை வாக்களித்தப்பின் பின்னர் அதை மாற்ற முடியாது.
6. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலமாக அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தில் மின்னணு மூலமாக வாக்களிக்கும் வாக்காளர் பட்டியல் ஜூலை 22, 2020 அன்று வரையறுக்கப்படும்.
7. எந்த ஒரு நபரும் அறிவிப்பு அனுப்பப்பட்டபின் வரையறுக்கப்பட்ட தேதிக்கு முன் கம்பெனியின் பங்குகளை வாங்கி உறுப்பினரானால், **evoting@nsdl.co.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது திரு.A.ஆரோக்கியராஜ், மேலாளர்– பங்குகள், சுந்தரம்–கிளேட்டன் லிமிடெட், முதல் தளம், "ஜெயலெக்ஷ்மி எஸ்டேட்ஸ்", எண்.29, ஹாடோஸ் சாலை, சென்னை - 600 006, மின்னஞ்சல் **arockiaraj@scl.co.in**–ல் விண்ணப்பம் செய்து உள்நுழைய அடையாளச் சொல் (login ID) மற்றும் கடவுச்சொல் (Password) ஆகியவற்றை கேட்டுப் பெறலாம். இருப்பினும் அவர்கள் NSDLல் தொலைவில் இருந்து வாக்களிக்க ஏற்கனவே பதிவு செய்து இருந்தால், அவர்கள் தங்கள் தற்போதைய அடையாளச் சொல் மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி வாக்களிக்கலாம்.
8. தொலைவில் இருந்து மின்னணு முறையில் வாக்களிக்க இயலாத அங்கத்தினர்கள் மின்னணு மூலமாக ஆண்டு பொதுக்கூட்டத்தில் வாக்களிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
9. தொலைவில் இருந்து மின்னணு முறையில் வாக்களித்த அங்கத்தினர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கு பெறலாம் ஆனால் அவர்கள் மறுபடியும் வாக்களிக்க முடியாது.
10. வரையறுக்கப்பட்ட நாளன்று உறுப்பினர் பதிவேடு அல்லது பயனாளிகள் பதிவேட்டில் உள்ள அங்கத்தினர்கள் மட்டுமே தொலைவில் இருந்து மின்னணு முறையில் அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தில் மின்னணு முறையில் வாக்களிக்க முடியும்.
11. திரு.K.ஸ்ரீராம், தொழில் முறை கம்பெனி செயலாளர் அவர்களை மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்குப்பதிவு ஆகியவை நேர்மையான மற்றும் ஒளிவுமறைவு இல்லாத முறையில் நடைபெற ஆய்வாளராக கம்பெனியால் நியமிக்கப்பட்டுள்ளார்.
12. வாக்களிக்கும் முறையில் ஏதேனும் சந்தேகமிருந்தால், உறுப்பினர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பகுதி அல்லது தொலைவில் இருந்து வாக்களிக்கும் முறை பற்றிய சிறு குறிப்பேடு ஆகிய பகுதிகளை www.evoting.nsdl.com என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம் அல்லது 1800-222-990 என்ற இலவச தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். மின் வாக்குப்பதிவு மீது சந்தேகம் மற்றும் குறைகள் இருந்தால் அவற்றை திரு. அமித் விஷால், மூத்த மேலாளர், நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் amitv@nsdl.co.in / 022–24994360 / +91 9920264780 அல்லது திரு. சாகர் கோசல்கர், துணை மேலாளர், நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் sagar.ghosalkar@nsdl.co.in / 022–24994553 / +91 9326781467 அல்லது திரு. A ஆரோக்கியராஜ், மேலாளர் – பங்குகள், சுந்தரம் கிளேட்டன் லிமிடெட், மின்னஞ்சல் : arockiaraj@scl.co.in அவர்களிடம் மேற்குறிப்பிட்ட முகவரியில் இருந்து தெரிந்து கொள்ளவும்.
13. கம்பெனியிடம் ஏற்கனவே தங்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு அவற்றை பதிவு செய்வது குறித்து கம்பெனியானது ஜூன் 26, 2020 அன்று ஒரு தகவல் தொடர்பினை வெளியிட்டது.
14. சரியான நேரத்தில் தகவல்களை பெற உங்கள் மின்னஞ்சல் முகவரியை கம்பெனி மற்றும் உங்கள் டெபாசிட்டரி பார்ட்டிசிபெண்ட்டுகளுடன் பதிவு செய்து கொள்ளவும்.

குழுவின் ஆணைப்படி
K.S. ஸ்ரீநிவாஸன்
கம்பெனி செயலாளர்

சென்னை
ஜூலை 6, 2020